𑌶𑍍𑌰𑍀𑌃

॥𑌶𑍍𑌰𑍀𑌮𑌤𑍇 𑌵𑌿𑌖𑌨𑌸𑌮𑌹𑌾𑌗𑍁𑌰𑌵𑍇 𑌨𑌮𑌃॥

यं प्राहुश्चिदचिच्छरीरजगती पद्माप्रियांशं बुधा वैकुण्ठोऽजनयद्भुजान्तरतले यं स्वार्हणार्थं

प्रभुः।योऽर्चाशास्त्रमचीकसज्जनिमृतिध्वान्तैकभानुं नृणां तं वन्दे विखनोगुरुं मुनिगणैस्तोष्टूयमानं मुनिम्।।

# 𑌔𑌖𑍇𑌯𑌮𑍍

# AUKHEYAM

# ஔகேயம்

நடார் ஸ்ரீ.உ.வே. கோ.ஸ்ரீநிவாஸ (ராஜம்) பட்டாச்சாரியார் ஸ்வாமியின்
நூற்றாண்டு விழாவில் வெளியிடப்பட்டது

கடுக்கலூர் ஸ்ரீ.உ.வே.எஸ்.ஸ்தலசயனபட்டாச்சாரியார் ஸ்வாமியின்
ஆசியுடன் வெளியிடப்படுகிறது


**சங்கேந்தி டாக்டர் ஸ்ரீ.முத்துபட்டர்**

சம்ஸ்க்ருதத்துறை, விவேகானந்தா கல்லூரி, சென்னை-4

&

**தஞ்சாவூர் டாக்டர். எஸ்.சுதர்ஷன்**

நூலகர், சரசுவதிமகால் நூலகம், தஞ்சாவூர்-9

ஸ்ரீவைகானஸஆகம ஆசார்ய: & ரத்னம், ஸ்ரீவைகானஸ யசோ பூஷணம்

**அம்மங்குடி வி.ஸ்ரீநிவாஸ பட்டாச்சாரியார்**

தலைமை அர்ச்சகம், ஸ்ரீ ஸ்ரீநிவாஸப்பெருமாள் கோவில்
செரங்கூன் ரோடு, சிங்கப்பூர்-218123

ப்ரஸ்துதேசம் நமஸ்க்ருத்ய சௌரீபுத்ரம் நமாம்யஹம்
கோபாலபுத்ரம் பிதரம் நமாமி ச புன: புன:.

ஸ்ரீலக்ஷ்மீவல்லபாரம்பாம் விகனோ முனிமத்யமாம்.
அஸ்மதாசார்ய பர்யந்தாம் வந்தே குருபரம்பராம்.

கௌஸல்யாயை ப்ரதமமதிசத்பூபதி: பாயஸார்த்தம்
ப்ராஸாதர்த்தம் ப்ரணயமதுரம் கேகயேந்த்ரஸ்ய புத்ர்யை.

ஏதே தேவ்யௌ தரலமனஸ: பத்யுராலோச்யபாவம்
ஸ்வார்த்தாம்சாப்யாம் ஸ்வயமகுருதாம் பூர்ணகாமாம் ஸுமித்ராம்.

ஸ்ரீமன்நாராயணனுடைய அனுக்ரஹ விசேஷத்தால் ஸ்ரீவைகானஸத்தின்படி பற்பல திவ்யதேசங்களிலும் கிராமங்களிலும் எம்பெருமான் நித்ய நைமித்திக ஆராதனாதிகளையும் உத்ஸவங்களையும் கண்டருளி அனுபவித்து வருகிறார். ஸ்ரீவைகானஸத்தில் கல்பஸூத்ரத்தையும் ஸ்ரீவிஷ்ணுவின் ஆராதனத்தையும் நமக்குக் கொடுத்தவர் ஸ்ரீமத்விகனஸர் ஆவார். கல்பசூத்ரத்தை இயற்றியவர்களில் ஸ்ரீவிகனஸர் ஒருவரே ஸ்ரீவைஷ்ணவர் ஆவார். இவருடைய கல்பசூத்ரத்தில் ஜாதகர்ம ஸம்ஸ்காரத்தில் அக்னி பரிகல்பனத்தைச் செய்யும்போது உத்தபனாக்னியை கூறுகிறார். இதை ஊகாக்னி என்பர். அதாவது தவிடு/உமியை ஒரு மண் ஓட்டில் போட்டு வறுத்தால் அதிகமாக வறுபடும்போது அது அக்னியாகிவிடும். அதைக்கொண்டு ஜாதகர்ம ஸம்ஸ்காரத்தைச் செய்யச்சொல்லுகிறார். இதனால் ஸ்ரீவைகானஸர்கள் ஔகேய அக்னி (ஊகாக்னி) ஸம்பந்தத்தை கொண்டவர்கள் என்பதால் இவர்களுக்கு ஔகேயர்கள், ஔகேயசாகையை உடையவர்கள் என்றழைக்கின்றனர். சென்னை அரசினர் கீழ்த்திசை ஓலைச்சுவடி நூலகத்தில் ஔகேயசாகை மந்த்ரங்கள் என்று அடங்கிய ஒரு ஓலைச்சுவடி இருக்கிறது. அதில் ஸ்ரீவைகானஸத்தின் ப்ரயோக மந்த்ரங்கள், ஸ்ரீவைகானஸத்தில் கடைபிடிக்கப்படும் கில மந்த்ரங்களும் எழுதப்பட்டுள்ளது. விஜயவாடா போன்ற வடதேசத்திலும் ஸ்ரீவைகானஸர்கள் ஔகேயசூத்ர: யஜுஸ்ஸாகா அத்யாயீ என்று தங்களுடைய கோத்ர ப்ரவரத்தைக் கூறுகின்றனர். ஆதலால் ஸ்ரீவைகானஸர்களை ஔகேயர்கள் என்றும் அழைக்கின்றனர். இதை அடிப்படையாகக் கொண்டு இந்த நூலுக்கு ஔகேயம் என்று பெயரிடப்பட்டுள்ளது.

ஸ்ரீவைகானஸத்தில் பற்பல மஹான்கள் இருந்தனர். ஆனால் அவர்களில் சிலரே இன்று நம்மிடையே கொண்டாடப்பட்டுவருகின்றனர். இதில் நம்முடைய நடார் ஸ்வாமி தனிச்சிறப்புடையவர். நம்முடைய சாஸ்த்ரத்தில் நல்ல புலமையும் பற்பல க்ரந்தங்களையும் வெளியிட்டுள்ளார். தற்சமயமும் பூர்வப்ரயோகம் அபரப்ரயோகம் ச்ராத்தப்ரயோகம் போன்ற ஸம்ஸ்காரங்கள் சரியாகச் செய்யப்பட்டு வருகிறது என்றால் அந்த நூல்களை தெளிவாக தமிழ் காரிகையுடன் நம் நடார் ஸ்வாமி வெளியிட்டதால் தான் என்று கூறினால் அது மிகையாகாது. இதுமட்டுமின்றி தன்னுடைய வாழ்நாளில் ஆசாரத்துடன் இருந்துகொண்டு சிஷ்யர்களையும் உருவாக்கி இருக்கிறார். இவர் உருவாக்கிய சிஷ்யர்களில் அம்மங்குடி ஸ்ரீமான். ஸ்ரீ.உ.வே.

வி.ஸ்ரீநிவாஸபட்டாச்சாரியார் இன்றும் தென் கிழக்கு ஆசியா சிங்கபூரில் ப்ரதான அர்ச்சகராகவும், ஸ்ரீவைகானஸ ஆகமரத்னா, ஸ்ரீவைகானஸ யசோ பூஷணம் போன்ற பட்டங்களைப் பெற்றும், சிங்கப்பூர் மட்டுமல்லாது லண்டன், மலேசியா, மயன்மார், பிப்பைன்ஸ், இந்தோனேஷியா போன்ற இடங்களுக்கும் சென்று நம்முடைய அர்ச்சா சாஸ்த்ரத்தை நிரவதிகமாக ஸ்ரீமன்நாராயணனுக்குச் செய்துகொண்டிருக்கிறார் என்பது குறிப்பிடத்தக்கது. நம்முடைய ஸ்ரீவைகானஸ இளைஞர்களுக்காக அவ்வப்போது நடைபெறும் அம்மங்குடி ஸ்ரீ.வி.ஸ்ரீநிவாஸபட்டாச்சாரியாரின் பந்துக்களுடைய திருமணவிழாக் காலங்களில் ஸ்ரீவைகானஸ ஸங்க்ரஹ விஷ்ணவாராதானக்ரமம், கல்யாணபஞ்சாசத் கதம்பம், மஹாசாந்தி ப்ரயோகம் போன்ற பற்பல புஸ்தகங்களையும் பிரசுரித்து அனைத்து நம் குல ஸ்வாமிகளுக்கும் இலவசமாகவே வழங்கியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. அதேபோன்று இந்த ஔகேயம் என்கிற ஸ்ரீவைகானஸத்தின் ஆய்வுக்கட்டுரை நிரம்பியுள்ள நூலை ஸ்ரீமன்நாராயணன், ஸ்ரீமத்விகனஸரின் அனுக்ரஹத்துடன் ப்ரசுரித்து ஸ்ரீவைகானஸர்களுக்கு இலவசமாகவே வழங்குகிறார். இவருடைய சேவை மேன்மேலும் வளர்ந்து நம் ஸமுதாயம் தழைத்தோங்க ஜகதாசார்ய ஸ்ரீமத்விகனஸரை ப்ரார்த்திக்கிறோம்.

இந்த ஔகேயம் என்ற ஆய்வுக்கட்டுரை நூலை வெளியிடுவதற்கு பற்பல ஸ்வாமிகள் ஆய்வுக்கட்டுரையையும், கவிதைகளையும் வழங்கியுள்ளனர். அவர்களுக்கு எங்களுடைய தன்யவாதங்களைத் தெரிவித்துக் கொள்கிறோம். இந்நூலுக்கு அபிநந்தனத்தை அருளிய அடியோங்களுடைய குரு கடுக்கலூர் ஸ்ரீமான்.ஸ்ரீ.உ.வே.எஸ். ஸ்தலசயனபட்டாச்சாரியார் ஸ்வாமிக்கு எங்களுடைய ப்ரணாமங்களைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

இந்த நடார் மஹானின் சதமான மஹோத்ஸவம் அம்மங்குடி அண்ணாவினுடைய முழு ஒத்துழைப்பால், தூண்டுதலால் தான் நடந்தது என்றால் அது மிகையாகாது. தினமும் எங்களுடன் சிங்கப்பூரில் இருந்து தொடர்பு கொண்டு ஏற்பாடுகளைச் சிறப்பாகச் செய்தார். இந்த சதமான மஹோத்ஸவ கமிட்டி அவருடைய ஆசையின்படி உத்ஸவத்திற்கு வந்திருந்த அனைவருக்கும் ஸ்ரீவைகானஸ ஸேவா பூஷணம் மற்றும் ஸ்ரீவைகானஸ குலபதி: என்கிற கௌரவ பட்டத்தையும் அளித்து கௌரவித்தது என்பதை பரமானந்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறோம்.

இந்நூலை குறுகிய காலத்தில் மிகவும் சிறந்தமுறையில் அச்சிட்டுக்கொடுத்த சாய் சுஜா எண்டர் ப்ரைசஸ், பூந்தமல் எனது நண்பர் ஸ்ரீ.அருண்குமாருக்கு எங்களுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

நமது ஸ்ரீவைகானஸகுல ஸ்வாமிகள் அனைவரும் இதிலுள்ள ஸத்விஷயங்களை ஹம்ஸத்தைப் போன்று ஸ்வீகரித்து ஆசீர்வதிக்க வேணுமாய் ப்ரார்த்திக்கிறோம்.

தாஸன்கள்

ஸ்ரீ.முத்து & ஸ்ரீ.சுதர்ஷன்